


# கட்டுகளை அவிழ்த்தல்



- சமூகப் பால்நிலை
- பெண் நிலைவாதம்

(இலகு வாசிப்பு நூல்)



- கமலா வாசுகி -

# கட்டுகளை அவிழ்த்தல்

## ~ சமூகப் பால்நிலை

## ~ பெண்நிலைவாதம்

(இலகு வாசிப்பு நூல்)

**கமலா வாசுகி**

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு.

கட்டுகளை அவிழ்த்தல்
சமூகப் பால்நிலை
பெண்நிலைவாதம்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

இல. 20, டயஸ் வீதி,

மட்டக்களப்பு, இலங்கை.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | 065 23297 |
| கணினி வடிவமைப்பு | : | உஷா பரமசிவன் |
| அச்சகம் | : | செலக்ஷன், அக்கரைப்பற்று |
| பதிப்பு | : | 2002 |
| விலை | : | ரூபா 50.00 |

**Gender and feminism an easy reading booklet**

Suriya Woman Development Centre,
No. 20, Dias Lane,
Batticaloa, Srilanka.

| | | |
|---|---|---|
| Telephone | : | 065 23297 |
| e - mail | : | suriyaw@slt.lk |
| Computer Designing | : | Usha Paramasivan |
| Printing | : | Selection, Akkaraipattu |
| Edition | : | 2002 |
| Price | : | Rs.50.00 |

© Editior

ISBN : 955-8695-00-9

## உங்களுடன்.................

உலகம் முழுவதிலும் மனிதர்கள் ஒருவரை ஒருவர் அடக்குவதும், ஆள்வதும் வர்க்கம், இனம், மதம் என்ற வேறுபாடுகளின் பெயரால் நிகழ்த்தப்படுகின்றன. இத்தகைய அனைத்து அடக்கு முறைகளுக்குள்ளும், அடக்குபவர்கள், அடக்கப்படுபவர்கள் அனைவருமே தமக்குள் நிகழ்த்தும் அடக்குமுறையாகவும் மனிதகுல வரலாற்றின் சகலதளங்களிலும் வேரோடிக்கிடக்கும் அடக்குமுறையாகவும் பெண்களின் மீதான அடக்குமுறை காணப்படுகிறது.

உலகம் முழுவதிலுமான சகலவிதமான பாரபட்சங்களையும் நீக்குவதற்கும், அடக்குமுறைகளிலிருந்து மீள்வதற்குமான அடிப்படையாக பெண்விடுதலையே அமையும். பெண்நிலைவாதம் இதற்காகவே பாடுபடுகிறது

பெண்நிலைவாதம் என்பது பேசப்படக்கூடாத தீண்டத்தகாத விடயமாக கொச்சைப்படுத்தப்படுகிறது. அதற்குக் காரணம் பெண்நிலைவாதம் பற்றி ஆணாதிக்க சக்திகளால் தவறாக, மேலோட்டமாகப் பரப்பப்பட்டிருக்கும் கருத்துக்களேயாகும்.

பெண்நிலைவாதத்தைப் புரிந்து கொள்வதற்குப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் சமூகத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் வேறுபாட்டைப் புரிந்து கொள்வது அவசியமாகும். இவ் வேறுபாட்டையே பால்நிலை வேறுபாடு எனத் தமிழிலும் GENDER என ஆங்கிலத்திலும் குறிப்பிடுகிறோம். இயற்கையாக அமைந்த பால்நிலையிலிருந்து சமூகம் தோற்றுவித்திருக்கும் பால்நிலையைச் சுட்டிப்பாகக் குறிப்பிடுவதற்காக இந்தப் புத்தகத்தில் சமூகப்பால்நிலை என்ற சொல்லைப் பாவித்துள்ளேன்.

சமூகத்தால், மனிதரால், எங்களால் உருவாக்கப்பட்ட இந்தப்பாகுபாடு
சமூகத்தால், மனிதரால், எங்களாலேயே களையப்பட வேண்டும்.


சமத்துவமான, நீதியான, சமாதானமான சமூகத்தை உருவாக்குவதற்கும், அமைதியான உலகை மீண்டும் நாம் காண்பதற்கும், பெண்நிலைவாதம் அவசியமானது. அதனைப் பலரும் புரிந்து கொள்ள வேண்டும் எனும் அவாவில் இந்த இலகு வாசிப்பு நூலை வெளியிடுகிறோம்.

இந்நூல் வெளிவர ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் நன்றிகள்.


ஆசிரியர்

## சமூகப் பால்நிலை என்றால் என்ன?


பிறந்த குழந்தைகளில் பாலுறுப்புக்களைத் தவிர ஏனைய உடல் உறுப்புக்கள்
அனைத்தும்
ஒரே மாதிரியாகவே இருக்கின்றன.
அவை அழுவது சிரிப்பது கை கால்களை அசைப்பது
ஒரே மாதிரியாகவே இருக்கின்றன.



பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் இயற்கையாகக் காணப்படும் வேறுபாடு
**பால் வேறுபாடு** ஆகும்.
நாம் குழந்தை ஆண்குழந்தையா, பெண் குழந்தையா என்பதை பாலுறுப்புக்களைப்
பார்த்து அறிந்து கொள்கிறோம்.
ஆனால் அதன் பின்னர் உடனடியாக அக் குழந்தையை எங்களது சமூக
விருப்பங்களுக்கேற்ப
பெண்ணாகவும், ஆணாகவும் வித்தியாசம் காட்டி
வளர்க்கத் தொடங்குகின்றோம்.



இயற்கையாக பால் அடிப்படையில்
வேறுபாடுகளைக் கொண்டுள்ள
பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில்
சமூகத்தால் பல எதிர் எதிரான
வேறுபாடுகள்
உருவாக்கப்படுகின்றன.




இவ்வாறு சமூகங்களால்

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் உருவாக்கப்படும் வேறுபாடுகளையே

**சமூகப் பால்நிலை வேறுபாடு**

என அழைக்கிறோம்.

**அதாவது சமூகத்தால் பெண்களுக்கும், ஆண்களுக்கும் வழங்கப்படும் வரைலிலக்கணம் சமூகப்பால்நிலை எனப்படும்.**





பெண் குழந்தை ← **இயற்கை** → ஆண குழநதை






பெண்மை ← **சமூகம்** → **ஆண்மை**

**இயற்கையான பால் வேறுபாடு**
**சமூகத்தால்**
**சமூகப்பால்நிலை வேறுபாடாக**
**உருவாக்கப்படுகிறது.**

## எவ்வாறு சமூகப் பால் நிலை உருவாக்கப்படுகிறது ?

நாங்கள் ஒவ்வொருவரும் சிறுவயதில் முதன்முதலாக பெண்ணாகவோ, ஆணாகவோ உணர்த்தப்பட்ட சந்தர்ப்பங்களை நினைவுபடுத்திப் பார்ப்போம்.

**பொம்பிளைப் பிள்ளை மரத்தில் ஏறாதே**






**ஆம்பிளைப் பிள்ளை தும்புத்தடியைத் தொடாதே**



**பொம்பிளைப் பிள்ளை வெளியில் நிற்காதே**

**ஆம்பிளைப் பிள்ளை வீட்டுக்குள்ளயே அடைஞ்சு கிடக்காதே**






இங்கு பெண் என்பதாலோ, ஆண் என்பதாலோ

குழந்தைகள் எதையும் செய்யாது விடுவதில்லை.

இயல்பாக குழந்தைகள் தமது வாழ்வுக்குத் தேவையான ஒவ்வொன்றையும் செய்து

பார்க்கத் தொடங்குகின்றன.

**ஆனால் சமூகம்**

**அதைச் செய்யாதே இதைச் செய்யாதே**


**என்று தடுப்பதால்**

**இயல்பாக முழு மனிதராக நாங்கள் வளர முடியாமல் போகிறது.**

பெண்களும் ஆண்களும் ஒவ்வொரு விதத்தில் குறைபாடுடையவர்களாக
ஒருவர் மற்றவரில் தங்கிவாழ்பவர்களாக வளர்கின்றனர்.

குடும்பத்தில் தொடங்கி மதம், அரசு, கலை, இலக்கியம், என்பவற்றால்
இப்பாகுபாடு மேலும் மேலும் வளர்க்கப்படுகிறது.

சமூகத்தால்
பெண்களிடம் உருவாக்கப்படும் இயலாமை அல்லது குறைபாடு
அவர்களை வெளி உலகு தெரியாதவர்களாக,
ஆண்களில் தங்கி வாழ்பவர்களாக
ஆக்குகிறது



ஆண்களிடம் உருவாக்கப்படும் இயலாமை அல்லது குறைபாடு, அவர்களை வீடு பற்றிய அக்கறையற்றவர்களாக வீட்டுக்கு வெளியான உலகுக்கு உரியவர்களாக ஆக்குகிறது. இது உலகு மீதான அதிகாரம் ஆகவும்,

பெண்கள் மீதான அதிகாரம்

ஆகவும் மாறுகிறது



**சமூகத்தில் பால் வேறுபாட்டின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றனவா? , பாரபட்சம் காட்டப்படுகிறதா?**


ஆம்.

குடும்பம், சமயம், அரசு, பொருளாதாரம், வரலாறு என சமூகத்தின் சகல தளங்களிலும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவது அனைவரும் அறிந்த உண்மை. இந்த பாரபட்சங்கள் கலாசாரத்தின் பெயரால் மதங்களின் பெயரால் உருவாக்கப்படுகின்றன.

**பணத்தாலோ பதவியாலோ வயதாலோ ஒரே அந்தஸ்தில் உள்ள பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில் பாரபட்சம் காட்டப்படுகிறது. இரட்டை நியாயங்கள் கூறப்படுகிறது.**




பெண்கள் மட்டுமே கலாசார அடையாளங்களைப் பேண வேண்டுமென நிர்ப்பந்திக்கும் பாரபட்சம்




ஒரே பதவியில் இருக்கும்,
ஒரே சம்பளம் எடுக்கும்
பெண்ணு க்கும் ஆணு க்கும் இடையில்
அதிகார வேறுபாடு காணப்படுகிறது.




வயதில் கூடிய பெண்ணை விட
வயதில் குறைந்த ஆணு க்கு
கூடிய மதிப்பு.

பெண்ணையும் பெண்ணைப் பெற்ற பெற்றோரையும்
மதிப்பற்றவர்களாக்கும் சீதனநடை முறை



**பெண்ணைப் பெற்ற ஆணினது**
**பணிவும்**
**ஆணைப் பெற்ற பெண்ணினது**
**அதிகாரமும்**
**இயல்பானது அல்ல -**
**சமூகத்தால்**
**உருவாக்கப்பட்டது**

ஆணைப் பெற்றதால் அந்தஸ்து பெறும்
மாமியார்



மலடி.
விதவை
எனும் பட்டங்கள்
**பெண்களைப்**
**பாரபட்சப்படுத்துகின்றன.**

வரலாறுகள் "மனிதனை"ப் பற்றியே பேசுகின்றன.
மனித குலம் தோன்றியதில் இருந்து இன்றுவரையிலான
பெண்களினது வரலாறு
"மனிதன்"ன் பின்னால் மறைக்கப்பட்டு உள்ளது.

ஆணை மட்டுமே மனிதன் என்று கூறும் வரலாறுகள் பெண்ணுக்குப் பாரபட்சம் காட்டுகின்றன.




மனிதனின் வரலாறு ? ? ? ? ? ?



சேட்டைகள்

அடி

பலாத்காரம்

**வீட்டிலும்**
**வெளியிலும்**
**பெண்கள் மீது நடாத்தப்படும்**
**வன்முறைகள்**
**சமூகப்பால்நிலை பாரபட்சத்தின்**
**காரணமாகவே நிகழ்த்தப்படுகின்றன.**


உதை

உரிமை மறுப்பு

கேலி

தூசண வார்த்தைகள்




பொருளாதாரம்
அரசியல்
தொடர்பு
சாதனங்கள்.......
பிள்ளைப் பராமரிப்பு
சமையல்
வரலாறு
கலை
இலக்கியம்
?
உலகநோக்கை
நிர்ணயித்தல்


**ஏன் சமூகப்பால்நிலை பற்றிப் பேச வேண்டி ஏற்பட்டுள்ளது?**

**ஏன் சமூகப்பால்நிலை மாற்றப்பட வேண்டும்?**


சமூகப்பால்நிலை தோற்றுவிக்கும் ஏற்றத்தாழ்வால்
அதிகாரம் ஆண்களுக்கு வழங்கப்படுகிறது.
பெண்கள் அடக்கப்படுவோராகின்றனர்.



ஆண்களுக்கு வழங்கப்படும் அதிகாரமும்
இதனால் தோற்றுவிக்கப்படும் ஆதிக்கமும்
ஆணாதிக்கம் ஆகும்.




**இனவாதம், மதவாதம் போன்று**
**சமூகப்பால்நிலை அடிப்படையிலான இந்த அதிகாரத்துவம்**
**பால்வாதம் ஆகும்.**



இனவாதத்தாலும், மதவாதத்தாலும் அடக்கப்படுவோர்
வன்முறைக்குட்படுத்தப்படுவது போன்றே
பால்வாதத்தாலும்
அடக்கப்படுவோரான பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர்.
பெண்களும் ஆண்கள் போன்று சமத்துவமாக வாழும் உரிமை மறுக்கப்படுகிறது.

உலகில் இன்று பாரபட்சம், அடக்குமுறை, வன்முறைகளுக்கு எதிராகப் பல
யுத்தங்கள் நிகழ்கின்றன.
இது போன்று பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் யுத்தம் நிகழுமாயின்
அதுவே உலகில் மனித குலத்தின் அழிவாக அமையும்.

**இதனால் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் சமத்துவமான சமுதாயத்தைத்**
**தோற்றுவிப்பதற்காக**
**சமூகப்பால்நிலை பற்றிப் பேசவும்**
**இதனை மாற்றவும் வேண்டிய தேவையுள்ளது.**



## சமூகப்பால்நிலை மாற்றப்படக்கூடியதா?

ஆம்.

மாற்றப்படக்கூடியது.

உலகம் முழுவதும்

பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையிலான பால் வேறுபாடு

அதாவது பாலுறுப்புக்களிலான வேறுபாடு

பொதுவானதாகவே இருக்கிறது.

ஆனால்

சமூகங்களால் பெண்களுக்கும் ஆண்களுக்கும் வழங்கப்பட்ட வரையறைகள்

பிரதேசத்துக்குப் பிரதேசமும்,

காலத்துக்குக் காலமும்

இனத்துக்கு இனமும்

வர்க்கத்துக்கு வர்க்கமும்

மாறுபாடுகளைக் கொண்டிருக்கிறது. மாறி வந்திருக்கிறது.

**எனவே சமூகப்பால்நிலைப்பாகுபாடு மாற்றப்படக் கூடியது.**

எமது ஊர்களில் ஆண் என்றால்

முன்னர்

தலை முடி
வளர்த்திருப்பார்,
குடுமி வைத்திருப்பார்



இன்று

தலைமுடி கட்டையாக
வெட்டி இருப்பர்.

**எனவே சமூகப்பால்நிலை காலத்துக்கு காலம் மாறுகிறது.**



திருமணம் போன்ற
சடங்குகள்
பெண்களையும் ஆண்களையும் நடத்துவது
இனத்துக்கு இனம்
வேறுபடுகிறது



**எனவே சமூகப்பால்நிலை இனத்துக்கு இனம் மாறுகிறது.**


பெண்கள் மென்மையானவர்கள் ஆண்கள் வலிமையானவர்கள் என சமூகப் பால்நிலை கூறுகிறது.



ஆனால் அது உண்மையல்ல
நாள் முழுவதும் ஓய்வின்றி
கடுமையான வேலைகளைச்
செய்பவர்கள் பெண்கள்.



செல்வந்தப்
பெண்களுக்கு ஓய்வு
அதிகம்
கடுமையான வேலைகள்
குறைவு






உழைப்பாளிப்
பெண்களுக்கான
ஓய்வு குறைவு
கடுமையான
வேலைகளில் அவர்கள்
ஈடுபடுவர்

**எனவே சமூகப்பால்நிலை வர்க்கத்திற்கு வர்க்கம் மாறுபடக் கூடியது.**

இவ்வாறு சமூகங்களால் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில்
உருவாக்கப்படும் வேறுபாடுகள்
பிரதேசத்துக்குப் பிரதேசமும்
காலத்துக்குக் காலமும்
இனத்துக்கு இனமும்
வர்க்கத்துக்கு வர்க்கமும்
மாறுபடுவதால்
**மாற்றப்படக் கூடியது.**

சமூகப்பால்நிலை
பெண்களுக்கும்
ஆண்களுக்கும்
இடையில் அதிகாரம்
வன்முறை ஏற்படாத
வகையில் சமத்துவம்
நிலவக் கூடியதாக
**மாற்றப்பட**
**வேண்டியது.**



## பெண்நிலைவாதம் என்றால் என்ன?

உலகம் முழுவதிலும் சமூகப்பால்நிலைப் பாகுபாட்டின் காரணமாக

- குடும்பம்
- சமூகம்
- மதங்கள்
- அரசு

**போன்ற சகல தளங்களிலும்**

- அடிப்படை உணவு
- போசாக்கு
- சுகாதார வசதிகள்
- கல்வி
- வேலைவாய்ப்பு
- சட்டம்
- தலைமைத்துவம்
- தீர்மானம் எடுக்கும் பதவிகள


**போன்ற சகல மட்டங்களிலும்**

பெண்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது.

இதனை ஏற்றுக் கொண்டு இந்நிலைமையை மாற்றுவதற்காகச் சிந்தித்தலும், செயற்படுதலும் பெண்நிலைவாதம் ஆகும் .



**சமூகத்தால் தோற்றுவிக்கப்படும் சமூகப்பால்நிலையால் உருவாக்கப்படும் பெண்களுக்குப் பாதகமான சகல விடயங்களையும், சகல தளங்களிலும் அகற்றுவதற்கான கருத்தியல் ரீதியான சிந்தனையும் செயற்பாடும் பெண்நிலைவாதம் ஆகும்.**





அடக்கப்படுவோரான பெண்களது நிலை நின்று உருவாகுவது பெண்ணிலைவாதம். இது ஆணாதிக்கத்துக்கு எதிரானது.

## யார் பெண்நிலைவாதிகள் ?


பெண்களுக்குப் பல மட்டங்களிலும் பாரபட்சம் நிலவுவதை ஏற்றுக் கொண்டு இந்நிலைமையை மாற்றுவதற்காகச் சிந்தித்துச் செயற்படுவோர் **பெண்நிலைவாதிகள் .**

சமூகப்பால்நிலை அடிப்படையிலான
**பாரபட்சம்** நிலவுவதை ஏற்றுக்
கொள்பவர்கள்
இனவாதம், மதவாதம் போன்று
**பால்வாதம்** நிலவுவதை ஏற்றுக்
கொள்பவர்கள்.
**ஆணாதிக்கம்** இருப்பதை ஏற்றுக்
கொள்பவர்கள்
இவற்றை நீக்குவதற்காகவும்
இவற்றுக்கு எதிராகவும்
செயற்படுவோர்
**பெண்நிலைவாதிகள்**






பெண்நிலைவாதம் மானிட சமூகத்துக்கு
மிகவும் முக்கியமானது.



ஏனெனில் அது உலகின்
50 சதவீதமானவர்களைப் பற்றிப்
பேசுகிறது.



பெண்களது விடுதலையை விரும்பாதவர்கள் ,
பெண்களது விடுதலையால் அதிகாரத்தை இழப்பவர்கள்
பெண்ணிலைவாதத்தைப் பற்றியும் பெண்ணிலைவாதிகளைப் பற்றியும் பல தேவையற்ற
கருத்துக்களை பரப்புகின்றனர்.





ஆனால் இவை உண்மையல்ல, மேலோட்டமான கருத்துக்களே.

**உண்மையில் கருத்தியல்ரீதியாகவும் செயற்பாட்டின் ஊடாகவும்**
**பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில்**
**சமத்துவமான சமாதானமான நிலைமையை உருவாக்குவதே**
**பெண்ணிலைவாதிகளின் நோக்கமாகும்.**

**பெண்நிலைவாதிகள் ஆண்களுக்கு எதிரானவர்களா?**

இல்லை



பெண் ஆணின் சொத்து

பெண்ணை விட ஆண் மேலானவன்

பெண் ஆணால் கட்டுப்படுத்தப்பட வேண்டியவள்

**போன்ற சமூக நிலைப்பாடுகளுக்கு பெண்நிலைவாதிகள் எதிரானவர்கள்.**

## பெண்நிலைவாதம் எவ்வாறு செயற்படுகிறது? அதன் வடிவம் என்ன?

பெண்ணிலைவாதச் செயற்பாடும் அதன் வடிவமும் ஆணாதிக்கம் பால்வாதம் என்பவற்றைச் சமூகத்தில் இருந்து அகற்றுவதற்கான எந்த வடிவத்திலும் இருக்கலாம்.

இது **தனிநபர் செயல்வாதம்** ஆக இருக்கலாம்.

அல்லது

**கூட்டு செயல்வாதம்** ஆகவும் இருக்கலாம்.


### தனிநபர் செயல்வாதம்



பெண்கள் செய்யமுடியாத அல்லது செய்யக்கூடாது என சமூகத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் கருத்தியலுக்கு எதிராகக் தீர்மானம் எடுத்துச் செயல்படுத்தல்

வழக்கமாக தலைமை தாங்கும் பதவிகளில் பெண்கள் அமர்வதை சமூகம் ஏற்பதில்லை ஆயினும் பெண் தலைமைப் பதவி ஏற்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தலைமை தாங்குதல் என்பது ஒரு **பெண்ணிலைவாதச் செயல்வாதமாகும்.**

பெண்களால் கையாள முடியாது
எனச் சமூகத்தால் கருதப்படும்
விடயங்களைக் கையாளுதல்
ஒரு
**பெண்ணிலைவாதச்
செயல்வாதமாகும்.**






குழந்தைகளை சுமப்பதும் பெறுவதும்
பெண்ணினது தீர்மானத்திற்கு அப்பாற் பட்டதாகச்
சமூகத்தால் கருதப்படுகிறது.

தான் எத்தனை குழந்தைகளை சுமப்பது
என்பதை ஒரு பெண் தானே தீர்மானித்தலும் செயற்படுத்துவதும்
**பெண்ணிலைவாதச் செயல்வாதமாகும்.**

## கூட்டு செயல்வாதம்

பெண்களுக்கு எதிரான சமூக , அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளுக்கு எதிராக கூட்டான நடவடிக்கைகள் எடுத்தல்

கூட்டங்கள்

கோரிக்கைகள்

மாநாடுகள்

ஊர்வலங்கள்

பிரசுரங்கள் + வெளியீடுகள்

பிரசாரங்கள்

போராட்டங்கள்





## பெண்நிலைவாதம் வெவ்வேறு வகைப்படுமா?
## மாறுபாடுகளைக் கொண்டதா?

எல்லா க் காலத்திற்கும் எல்லாப் பெண்களுக்கும் பொருந்தக் கூடிய
ஒரே ஒரு பெண்நிலைவாதம் என்பது இல்லை.

சமூகப் பால்நிலையானது பிரதேசத்துக்கு பிரதேசம், காலத்துக்கு காலம்,
இனத்துக்கு இனம், வர்க்கத்துக்கு வர்க்கம் மாறி வந்துள்ளது.

எனவே சமூகப்பால்நிலையை கேள்விக்குள்ளாக்கும் பெண்நிலைவாதமும்
பிரதேசத்துக்கு பிரதேசம்
காலத்துக்கு காலம்
இனத்துக்கு இனம்
மாற்றங்களைக் கொண்டிருக்கிறது.

பெண்களுக்கு எதிரான வெவ்வேறு சமூக நிலைப்பாடுகளுக்கு எதிரான;
பெண்கள் விடுதலைக்கு ஆதரவான, சிந்தனைகளும் செயற்பாடுகளும்
பெண்நிலைவாத செயல்வாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.


FEMINISM (தமிழில் "பெண்நிலைவாதம்")
என்ற சொல் முதலில் 17ம் நூற்றாண்டில் பாவிக்கப்பட்டுள்ளது.

### 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்

பெண்நிலைவாதம் என்பது பெண்களது ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டமாக இருந்தது.

அதாவது,

பெண்கள் கல்வி கற்பதற்கான உரிமை, தொழில் உரிமை, சொத்து உரிமை, வாக்கு உரிமை, பாராளுமன்ற உறுப்புரிமை, விவாகரத்து உரிமை குடும்பக்கட்டுப்பாடு செய்வதற்குத் தீர்மானிப்பதற்குமான உரிமை என்பவற்றைப் பெறுவதற்கான கொள்கை உருவாக்கம், சட்ட மீளுருவாக்கம் போன்றவற்றுக்கான போராட்டமாக இருந்தது.




என எமது பழந் தலைவர்கள் எதிர்த்தனர்

வாக்குரிமைக்காக, கல்விக்காக எமது பெண்கள் போராடி வென்றனர்.

---

**இப்போராட்டங்கள் குடும்பம் என்ற கட்டமைப்புக்கு வெளியே சமூகத்தில் பெண்களது உரிமைளைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டங்களாக இருந்தன.**


**இன்று பெண்நிலைவாதப் போராட்டம் பெண்களது முழுமையான உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கானதாக, முழுமையான பெண் விடுதலையை நோக்கியதாக முன்னெடுக்கப்படுகிறது.**


அதாவது

குடும்பங்களுள் சுரண்டலுக்கு எதிரானதாக

இரட்டைச் சுமைக்கு எதிரானதாக

உற்பத்தி மீளுற்பத்தியில் (குழந்தைப் பேறு, மனிதப் பராமரிப்பு)பெண்களின் பங்கு சேர்க்கப்பட வேண்டும் என்பதாக முன்னெடுக்கப்படுகிறது.






**குடும்பங்களுக்குள்ளும்**
**உரிமைக்கான போராட்டம்**


**இப்போராட்டங்கள் குடும்பத்துள்ளும் சமூகத்திலும் சமத்துவம், சுதந்திரம், கௌரவம் என்பவற்றை பெறுவதற்கான போராட்டமாகத் தொடர்கிறது.**

## பல பெண்நிலைவாதக் கோட்பாடுகள் உள்ளனவா?

மாவோயிசம், மார்க்சியம் போன்ற பெண்நிலைவாதம் ஒருவரால்
உருவாக்கப்பட்டதல்ல

வெவ்வேறு சமூக, அரசு, பொருளாதார நிலைகளில் வேரூன்றி இருக்கும்
ஆணாதிக்கத்தை களைவதற்காக
வெவ்வேறு கருத்தியல்களையும் உத்திகளையும்
காலத்துக்கு காலம்
பெண்நிலைவாதம் வரையறுத்தும் மாற்றியும் வருகிறது.

இவற்றுள் சில :



- தலித் பெண்நிலைவாதம்
- கறுப்பு பெண்நிலைவாதம்
- சூழல் பெண்நிலைவாதம்
- கிறிஸ்தவப் பெண்நிலைவாதம்
- பின் காலனித்துவப் பெண்நிலைவாதம்
- முற்போக்கு பெண்நிலைவாதம்
- மார்க்சியப் பெண்நிலைவாதம்
- தீவிரவாதப் பெண்நிலைவாதம்
- இஸ்லாமியப் பெண்நிலைவாதம்
- சோசலிசப் பெண்நிலைவாதம்

## பெண்நிலைவாதிகள் பெண்நிலைவாதத்தை ஐரோப்பாவிலிருந்தா இறக்குமதி செய்கிறார்கள்?

பாராளுமன்றம்
மார்க்சியம்
நவீனத்துவம்
மதங்கள்
முதலாளித்துவம்
வங்கிகள்
வர்த்தகம்
சட்டம்

என இன்று எமது நாளாந்த வாழ்க்கையிலும், சமூக, அரச பொருளாதாரத் தளங்களிலும் கோட்பாடுகளிலும் ஐரோப்பிய செல்வாக்கு ஏராளமாக இருக்கிறது. இவை பற்றி யாரும் கேள்வி எழுப்புவதில்லை




ஆயினும், பெண்கள் பற்றியும் பெண்நிலைவாதம் பற்றியும் மட்டுமே கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

இதற்கும் காரணம் ஆணாதிக்கச் சிந்தனையே

பெண்களுக்குப் பாரபட்சமான சமூக நிலைப்பாடுகள் எமது பிரதேசங்களில் காலங்காலமாக நிலவி வந்திருப்பது வரலாற்று உண்மையாகும். எமது புராண இதிகாசங்கள் இலக்கியங்கள் இவற்றுக்குச் சான்றாக உள்ளன.

ஆகவே, இவற்றுக்கு எதிரான சிந்தனையும் செயற்பாடுகளும் பெண்களாலும் ஆண்களாலும் முன்னெடுக்கப்பட்டே இருந்திருக்கும். இச் செயற்பாடுகள் வரலாற்றில் மறைக்கப்பட்டு இருக்கின்றன.

கற்புநிலை யென்று சொல்ல வந்தா ரிரு
கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்

பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவின் லாணுக்கிங்கே பெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந் தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடுவோம்.

– பாரதி–



**பெண் அடக்குமுறை எமது சமுதாயத்திற்கு புதிதல்ல என்பதால், அதற்கு எதிரான பெண்நிலைவாதமும் எமக்குப் புதியதல்ல. அது எமக்குத் தேவையானதே.**

## எமது பெண்நிலைவாதமாக எதனைக் குறிப்பிடலாம்?

எமது சமூக, அரசியல், பொருளாதாரச் சூழலில் பெண்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்டுள்ள விடயங்களைக் களைவதற்கான செயல்வாதம் எமது பெண்நிலைவாதம் ஆக அமையும்.

உலகளாவிய ரீதியில் பெண்கள் பொதுவான பல அடக்குமுறைகளை அனுபவிக்கின்றனர்.

இலங்கைப் பெண்கள் என்ற வகையில் இலங்கையின் சமூக, அரசியல், பொருளாதாரச் சூழலுக்குரிய பாரபட்சங்களை எதிர்நோக்கும் அதே வேளையில் இலங்கைக்குள்ளேயே பிரதேச, இன, மதரீதியாக பிரத்தியேகமான பிரச்சனைகளையும் எதிர்கொள்கின்றனர்.



உதாரணமாக,

ஆடைத்தொழிற்சாலைகளில் பெண்கள் சுரண்டப்படல்,

தேயிலை இறப்பர் தோட்டங்களில் பெண்களின் உழைப்பு சுரண்டப்படல்,



குறித்த இனக்குழுக்களின் மீதான போர்வன்முறைகள்

அரசியல் ரீதியான பாலியல் வன்முறைகள்

பெண்கள் மீது மட்டுமான கலாசார கட்டுப்பாடுகள்

இலங்கையில் தமிழ் பேசும் பெண்களாகிய நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சனைகள் இருக்கின்றன



திருமண நடைமுறைகள்,
சீதனம்,
பூப்புனித நீராட்டு விழா போன்ற சடங்குகள்,
சமய, சமூக சடங்குகளில் பாரபட்சம்,
கற்பு, விதவை, மலடி பற்றிய எண்ணக்கருக்கள்,
குடும்ப வன்முறைகள்,
பாலியல் பலாத்காரங்கள்,
சட்டங்கள், சொத்துக்கள், வளங்கள் மீதான உரிமையில் பாரபட்சம்,
பெண்கள் மீது மட்டுமான ஆடைகள்,
கலாசாரம் பற்றிய கட்டுப்பாடுகள்,
உள்நாட்டு யுத்தம் காரணமான பாதிப்புக்கள்,
பாலியல் வன்முறைகள்




**உலகளாவிய ரீதியிலான பொதுப்பிரச்சனைகளுடன் எமக்குப் பிரத்தியேகமானதுமான பிரச்சனைகளைத் களைவது எமக்குரிய பெண்நிலைவாத செயல்வாதமாக அமையும்.**

SELECTION - AKKARAIPATTU 067 - 78219